**சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**
**விடுமுறைக்கால சுயகற்றல் செயலட்டை**
**ஆக்கம் - நிவிதிகல கல்வி வலயம்**

**தமிழ் – தரம் 9**

**காலம் : 2021.06.14 தொடக்கம் 2021.06.20 வரை**

**திங்கட்கிழமை** (2021.06.14 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பாடநூலில் "தந்தை மகனுக்கு எழுதிய புகழ்பெற்ற கடிதம்" பாடத்தை கொண்டு விடை எழுதுக**

1. கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டது ?
2. மகளின் இவ்விடயம் தொடர்பாக மேலதிக விளக்கம் கோரப்படுகிறது ?
3. "அழுகிய மலர்கள், களைச்செடிகளைவிட மோசமான நாற்றமெடுக்கும்" என்பதனால் கருதப்படுவது ?
4. தந்தை எப்பொழுதும் நம்பிக்கை கொண்ட விடயங்கள் எவை ?
5. பொருள் தருக:

   01) வெகுமதி   02) கட்டணம்   03) தகுந்தபடி

**செவ்வாய்க்கிழமை** (2021.06.15 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 93** இல் இணைப்பிடைச் சொற்கள் பகுதியை நன்கு வாசித்து பின்வரும் இணைப்பிடைச் சொற்களுக்கு பொருத்தமான வாக்கியங்களை எழுதுக.

1. ஆனால்   2. எனினும்   3. ஆகவே
4. இருப்பினும்   5. அதனால்

**புதன்கிழமை** (2021.06.16 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 96** இல் உள்ள பயிற்சியில் **"அதனால்" "இருப்பினும்"** ஆகிய இணைப்பிடைச்சொற்களில் பொருத்தமானதை பயன்படுத்தி இணைத்து எழுதுக.

**வியாழக்கிழமை** (2021.06.17 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பின்வரும் வாக்கியங்களை பொருத்தமான இணைப்பு சொற்களை பயன்படுத்தி மீள எழுதுக**

1. மழை நன்றாக பெய்தது, பயிர்கள் செழிப்பாக வளர்ந்தன.
2. பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு.
3. கமலா ஒரு கெட்டிக்கார மாணவி, கமலா மற்றவர்களுடன் இயல்பாக பழகுவதில்லை.
4. பாரதியார் சிறந்த கவிதைகளைப் படைத்துள்ளார், பாரதியார் ஓர் மகாகவி ஆவார்.
5. கிருபாகரன் வகுப்பில் நன்றாக இயங்க கூடியவன், கிருபாகரன் பரீட்சையில் சித்தி அடையவில்லை.

**வெள்ளிக்கிழமை** (2021.06.18 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 95** உள்ள கடிதம் என்கின்ற பகுதியை நன்கு வாசித்து **பக்கம் 96** வழங்கப்பட்டுள்ள கடிதம் மாதிரியையும் வருகின்ற விடயங்களையும் பயிற்சி கொப்பியில் பிரதி செய்து கொள்ளுங்கள்

**சனிக்கிழமை** (2021.06.19 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 97** இல் வழங்கப்பட்டுள்ள தொழில்முறை கடிதத்தை நன்கு வாசித்து கொண்டு அதில் உள்ள முறைகளிற்கு அமைவாக **97ம் பக்கத்தில்** உள்ள பயிற்சியினை செய்க.

**ஞாயிற்றுக்கிழமை** (2021.06.20 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 91** இல் உள்ள கலைச்சொற்களை கொப்பியில் பிரதி செய்து கொண்டு பின்னர் அதன் கீழ் உள்ள பயிற்சியில், கலைச் சொற்களைப் பயன்படுத்தி பந்தியை மீள எழுதுக